# விழுப்புரம் கலெக்டர் பழனி தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்




விழுப்புரம், ஜூலை 27–

விழுப்புரம் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் டாக்டர் சி.பழனி தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட கலெக்டரிடம் விவசாயிகள் வைத்த கோரிக்கைகளாவது:

புதுவை கூட்டுறவு சர்க்கரை ஆலை எல்லைக்கு உட்பட்ட கண்டமங்கலம் மற்றும் வானூர் எல்லைக்கு உட்பட்ட தமிழ்நாடு எல்லைப்பகுதியை பொதுப்பகுதியாக அறிவிக்க நடவடிக்கை எடுக்குமாறும், வானூர் பகுதியில் தற்பொழுது நெல்அறுவடை துவங்கும் நிலையில் இருப்பதால் புதுகுப்பம் கிராமத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் துவங்க கோரி நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை வைத்தனர்.

மேலும், இருவேல்பட்டு ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையத்தில்திருவெண்ணெய்நல்லூரில் இயங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், காட்டுபன்றிகள் சேதத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கூடுதலான தொகையினை அரசாங்கத்திடம் பெற்று விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வனத்துறை மூலம் மாதம் தோறும் விவசாயிகளுக்கு குறைகேட்புக்கூட்டம் நடத்த வேண்டும். விழுப்புரம் மாவட்டத்தில் அனைத்து ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களிலும் பணப்பட்டுவாடா மூன்று நாட்களுக்குள் வழங்கிட உத்தரவிட வேண்டும்.

வேளாண்மைத்துறை மூலம் வரும் சம்பா பருவம் துவங்க உள்ள நிலையில் அனைத்து வட்டாரங்களிலும் விவசாயிகளுக்கு தேவையான விதைகளை இருப்பு வைக்க வேண்டும். மேலும், பட்டு வளர்ச்சி துறை மூலம் 2024 ஆம் ஆண்டு பயிர் செய்யப்பட்ட விவரங்களை வட்டாரங்கள் வாரியாக தெரிவித்திடவும் மேலும் அனைத்து வட்டாரத்திலும் பயிற்சிகள் நடத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும். விதை நெல் பயிரிடுகின்ற அனைத்து கிராமத்திலும் உலர்கலன் அமைத்திட வேண்டும். கால்நடை பராமரிப்புத்துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை கையேடாக வழங்க வேண்டும். நந்தன் கால்வாய் திட்டம் விரைவில் துவங்கிட நடவடிக்கை எடுக்க கோரிக்கை வைத்தனர். வேளாண்மை துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டத்தில் விடுபட்ட அனைத்து விவசாயிகளுக்கும் தொகை கிடைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதுமட்டு மல்லாமல், விவசாயிகள் வைத்த பொதுவான கோரிக்கைகளாவது. அனைத்து ஏரிகள், குளங்கள், குட்டைகள் போன்றவற்றை தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், நீர்நிலைகள், அரசாங்க புறம்போக்கு இடங்கள் போன்ற ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், அனைத்து ஏரிகளிலும் உள்ள சீமை கருவேல மரங்களை அகற்ற நடவடிக்கை எடுக்க கோரியும், அனைத்து விவசாயிகளுக்கும் அத்தியாவசிய தேவையான பட்டா மாறுதல் மற்றும் ருனுசு திருத்தம் உடனடியாக செய்து கொடுக்க வேண்டும் என கோரிக்கை வைத்தனர்.

மேலும், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் வைக்கும் கோரிக்கைகள் தொடர்ந்து நிறைவேற்றி கொடுக்கப்பட்டு வருகிறது. தற்பொழுது இன்று தெரிவித்த கோரிக்கைகளும் நிறைவேற்றுவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என மாவட்ட கலெக்டர் டாக்டர் சி.பழனி தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பரமேஸ்வரி, மேற்பார்வை பொறியாளர் லட்சுமி தேவி, வேளாண்மை இணை இயக்குநர் (பொ) இரா.சீனிவாசன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவ) எ.பிரேமலதா, விவசாய பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




# விஐடி – வால்வோ இந்தியா இடையே புதிய படிப்பிற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம்

## வேந்தர் விசுவநாதன் முன்னிலையில் கையெழுத்து

வேலூர், ஜூலை 27–

விஐடி வால்வோ இந்தியா இடையே புதிய படிப்பிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் வேந்தர் விசுவநாதன் முன்னிலையில் கையெழுத்தானது.

வால்வோ குரூப் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம் மூலமாக ஸ்மார்ட் மொபிலிட்டி ( M.Tech ) பாடத்திட்டம் உருவாக்க விஐடியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலமாக வால்வோ நிறுவனம், பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு வழங்க விஐடி மாணவர்களுக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதே போல் ஸ்மார்ட் மொபிலிட்டி, பாடத்திட்டம் தயாரிப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கும்.

மேலும் வால்வோ குரூப் இந்தியா சிஎஸ்ஆர் அறக்கட்டளை, விஐடி யில் பி.டெக் பயிலும் 5 மாணவிகளுக்கு (20242028 பேட்ச்), 4 ஆண்டுகளுக்கு கல்வி கட்டணத்தின் முழுச் செலவையும், மேலும் வால்வோ குரூப் இந்தியா சிஎஸ்ஆர் அறக்கட்டளை ஏற்கும். பி.டெக் இயந்திர பொறியியல் , பி.டெக். இயந்திர பொறியியல் [எலக்ட்ரிக் வாகனங்கள்], அல்லது பி.டெக். இயந்திர பொறியியல் [உற்பத்தி பொறியியல்] பாடங்கள் பயிலலாம்.

விஐடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விஐடி நிறுவனர் மற்றும் வேந்தர் டாக்டர் கோ.விசுவநாதன், வால்வோ குரூப் இந்தியா வின் சிஎஸ்ஆர் இயக்குனர் ஜி.வி. ராவ், விஐடி துணைத்தலைவர்கள் சங்கர் விசுவநாதன், டாக்டர்.ஜி.வி.செல்வம், துணைவேந்தர் டாக்டர் வி.எஸ். காஞ்சனா பாஸ்கரன், இணை துணை வேந்தர் , டாக்டர் பார்த்தசாரதி மல்லிக், பதிவாளர் டாக்டர் ஜெயபாரதி , வால்வோ மனித வள மேம்பாட்டு துறை தலைவர் டாக்டர் டி.பி. ரஞ்சித், பிரபு கிருஷ்ணன், வால்வோ மனித வள மேம்பாட்டு துறை துணை மேலாளர் ஆகியோர் முன்னிலையில் இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டு ஒப்பந்தத்தை பரிமாறிக்கொண்டனர்.

# அண்ணாமலை பல்கலைகழகத்தில் கார்கில் வெற்றியின் 25வது ஆண்டு நினைவேந்தல்




சிதம்பரம், ஜூலை 27–

கார்கில் போர் வெற்றியின் 25வது ஆண்டு விழாவை முன்னிட்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கார்கில் விஜய் திவாஸ் கொண்டாடப்பட்டது.

நிகழ்ச்சிக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழக துணைவேந்தர், கௌரவ கர்னல் இராம கதிரேசன் தலைமை வகித்தார். கௌரவ கர்னல் பதவி வழங்கப்பட்ட உடனேயே கார்கில் வெற்றிக் கொண்டாட்டத்தில் பங்கேற்று அஞ்சலி செலுத்தியது பெருமிதம் அளிப்பதாக கூறினார்.

நிகழ்ச்சியில் கார்கில் போர் குறித்து விரிவாகப் பேசிய என். சி.சி. காமாண்டிங் ஆஃபீசர் கர்னல் வாசுதேவன் சிறப்புரை ஆற்றினார். இதைத் தொடர்ந்து, அனைவரும் 2 நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தி கார்கில் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தினர்.

இதைத் தொடர்ந்து மேஜர் ஜஹருதீன் கானின் விரிவுரை நடைபெற்றது. மேலும், கார்கில் விஜய் திவாஸ் நினைவாக மாணவர்களுக்கு இடையே நடத்தப்பட்ட போட்டியின் ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டு, மாணவர்களிடையே தேசபக்தியை வளர்க்கும் வகையில் அவர்களின் திறமையை வெளிப்படுத்தியது. தியாகிகளை கவுரவிக்கும் வகையில் கவிதைப் போட்டியும் நடைபெற்றது.

விழாவில், பல்கலைக்கழக உயரதிகாரிகள், ராணுவ வீரர்கள், என்சிசி அதிகாரிகள் மேஜர். ஆர். கனகராஜன், கேப்டன் ரவிச்சந்திரன், லெப்டினன்ட் தி.பாலமுரளி, தேசிய மாணவர் படையை சேர்ந்த ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

இந்த கொண்டாட்டம் வீரர்களின் வீரம் மற்றும் தியாகங்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாகவும், பங்கேற்பாளர்களுக்கு கல்வி அனுபவத்தை அளித்ததுடன், நாட்டின் இராணுவ வரலாற்றின் ஆழமான புரிதலையும் மரியாதையையும் வளர்த்தது.


## லேட்டன்ட் வியூ அனலிட்டிக்ஸ் லிமிடெட்

latentview — Actionable Insights • Accurate Decisions

CIN எண் : L72300TN2006PLC058481

பதிவு அலுவலகம்: 5வது தளம், நெவில் டவர், யூனிட் 6,7 மற்றும் 8, ராமானுஜன் ஐடி சிட்டி, ராஜீவ் காந்தி சாலை, தரமணி, சென்னை - 600113,

இணையதளம்: www.latentview.com | மின்னஞ்சல்: investorcare@latentview.com

**ஜூன் 30, 2024 உடன் முடிவடைந்த காலாண்டுக்கான ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளின் சுருக்க அறிக்கை**

(ரூ. பத்து லட்சத்தில்)

| வ. எண் | விவரங்கள் | முடிந்த காலாண்டு ஜூன் 30, 2024 (தணிக்கை செய்யப்படாதது) | முடிந்த காலாண்டு ஜூன் 30, 2023 (தணிக்கை செய்யப்படாதது) | முடிந்த ஆண்டு மார்ச் 31, 2024 (தணிக்கை செய்யப்பட்டது) |
|---|---|---|---|---|
| 1. | செயல்பாடுகள் மூலம் மொத்த வருவாய் | 1,963.13 | 1,655.68 | 7,143.85 |
| 2. | இக்காலத்திற்க்கான நிகர லாபம் (வரிக்கு முன் மற்றும் விதிவிலக்கான வகைக்கு முன்) | 521.06 | 427.90 | 1,970.25 |
| 3. | இக்காலத்திற்க்கான நிகர லாபம் வரிக்கு முன் (விதிவிலக்கான வகைக்கு பின்) | 521.06 | 427.90 | 1,970.25 |
| 4. | இக்காலத்திற்க்கான நிகர லாபம் வரிக்கு பின் (விதிவிலக்கான வகைக்கு பின்) | 389.26 | 328.59 | 1,586.44 |
| 5. | இக்காலத்திற்க்கான முழுமையான வருமானம் (இக்காலத்திற்க்கான லாபம் / (இழப்பு) (வரிக்கு பின்) மற்றும் இதர முழுமையான வருமானம் (வரிக்கு பின்) | 391.01 | 322.07 | 1,613.93 |
| 6. | பங்கு மூலதன மதிப்பு (முகமதிப்பு தலா ரூ.1/-) | 206.00 | 204.90 | 205.90 |
| 7. | ஒரு பங்கு வருமானம் (முக மதிப்பு தலா ரூ.1/-) | | | |
| | 1. அடிப்படை : (ஆண்டு நிலையில் அல்லாத மதிப்பு) | 1.89 | 1.60 | 7.73 |
| | 2. இளகியது : (ஆண்டு நிலையில் அல்லாத மதிப்பு) | 1.88 | 1.59 | 7.68 |

தனிநிலை நிதி முடிவுகள் பற்றிய கூடுதல் தகவல் பின்வருமாறு: (ரூ. பத்து லட்சத்தில்)

| வ. எண் | விவரங்கள் | முடிந்த காலாண்டு ஜூன் 30, 2024 (தணிக்கை செய்யப்படாதது) | முடிந்த காலாண்டு ஜூன் 30, 2023 (தணிக்கை செய்யப்படாதது) | முடிந்த ஆண்டு மார்ச் 31, 2024 (தணிக்கை செய்யப்பட்டது) |
|---|---|---|---|---|
| 1. | செயல்பாடுகள் மூலம் மொத்த வருவாய் | 952.40 | 862.87 | 3,607.31 |
| 2. | வரிக்கு முன் லாபம் | 389.07 | 362.28 | 1,539.41 |
| 3. | வரிக்குப் பின் லாபம் | 278.66 | 263.83 | 1,132.68 |

குறிப்புக்கள் :

1. மேற்கண்ட சுருக்க நிதிநிலை அறிக்கை, இந்திய பங்கு பரிவர்த்தனை வாரிய (பட்டியலிடுதலுக்கான கடமைகள் மற்றும் பிற வெளியீடுகளுக்கான தேவைகள்) நெறிமுறைகள் 2015, விதி எண் 33ன் படி, பங்குச் சந்தைகளில் சமர்ப்பிக்கப்பட்ட விரிவான காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகள் தொடர்பான முழு அறிக்கை, இந்திய தேசிய பங்கு சந்தை www.bseindia.com மற்றும் மும்பை பங்குசந்தை www.nseindia.com ஆகியவற்றின் இணைய தளங்களிலும், நிறுவனத்தின் www.latentview.com என்ற இணைய தளத்திலும் உள்ளன.
2. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள், தணிக்கை குழுவால் ஜீலை 26, 2024 அன்று நடைபெற்ற கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டு, நிறுவன இயக்குநர்கள் குழும கூட்டத்தில் ஜீலை 26, 2024 ஒப்புதல் வழங்கப்பட்டது.

லேட்டன்ட் வியூ அனலிட்டிக்ஸ் லிமிடெட் உத்தரவின்படி
**ராஜன் சேதுராமன்**
தலைமை நிர்வாக அதிகாரி (CEO)

இடம் : சென்னை
தேதி : ஜூலை 26, 2024




திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட காணியம்பாக்கம் ஊராட்சியில் அடங்கிய தோப்பு காலனியில் எண்ணூர் காமராஜர் துறைமுக பெரு நிறுவன சமூக வளர்ச்சி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூபாய் 10 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகர் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். மீஞ்சூர் ஒன்றியக் குழுப் பெருந் தலைவர் அத்திப்பட்டு ஜி. ரவி,காணியம்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் ஜெகதீசன்,ஒன்றிய கவுன்சிலர் மாதவி தன்சிங், மாவட்ட கவுன்சிலர் தேசராணி தேசப்பன்,மீஞ்சூர் பேரூராட்சி மன்ற முன்னாள் தலைவர்கள் ராஜேந்திரன், மோகன்ராஜ்,மீஞ்சூர் பேரூர் கழகச் செயலாளர் தமிழ் உதயன்,ஒன்றிய கவுன்சிலர்கள் நந்தியம் கதிரவன்,கொண்டக்கரை ரமேஷ் உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டனர்.


## TULSYAN NEC LIMITED

**Regd. Off. :** 1st Floor, Apex Plaza, Old No.3, New No.77, Nungambakkam High Road, Chennai - 600 034. **Phone :** 044 - 61991060. **Fax :** 044 - 61991066. **email :** investor@tulsyannec.in
**Website :** www.tulsyannec.in **CIN No. :** L28920TN1947PLC007437

**Unaudited Standalone and Consolidated Financial Results for the Quarter ended June 30, 2024**

(₹ in Lakhs)

| Sl. No. | Particulars | Standalone: Quarter ended June 30, 2024 (Unaudited) | Standalone: Quarter ended March 31, 2024 (Audited) | Standalone: Quarter ended June 30, 2023 (Unaudited) | Standalone: Year ended March 31, 2024 (Audited) | Consolidated: Quarter ended June 30, 2024 (Unaudited) | Consolidated: Quarter ended March 31, 2024 (Audited) | Consolidated: Quarter ended June 30, 2023 (Unaudited) | Consolidated: Year ended March 31, 2024 (Audited) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | Total Income from Operations | 26,225.16 | 22,776.47 | 24,545.77 | 97,352.92 | 27,662.51 | 24,175.28 | 23,581.95 | 99,459.04 |
| 2. | Net Profit/(Loss) for the period (before tax and exceptional items) | 39.27 | (2,075.17) | (1,257.69) | (4,828.12) | 58.08 | (2,033.88) | (1,215.83) | (4,766.51) |
| 3. | Net Profit/(Loss) for the period before tax (after exceptional items) | 39.27 | (2,075.17) | (1,257.69) | (4,828.12) | 58.08 | (2,033.88) | (1,215.83) | (4,766.51) |
| 4. | Net Profit/(Loss) for the period after tax (after exceptional items) | 39.27 | (2,075.17) | (1,446.62) | (5,017.05) | 58.08 | (1,989.84) | (1,404.76) | (4,911.40) |
| 5. | Other comprehensive Income (net of tax) | 0.00 | (235.79) | (4.15) | (223.73) | 0.00 | (235.79) | (4.15) | (223.73) |
| 6. | Total comprehensive Income for the period [comprising Profit/(Loss) for the period (after tax) and Other comprehensive Income (after tax)] | 39.27 | (2,310.96) | (1,450.77) | (5,240.78) | 58.08 | (2,225.63) | (1,408.91) | (5,135.13) |
| 7. | Equity Share Capital | 1,655.14 | 1,655.14 | 1,655.14 | 1,655.14 | 1,655.14 | 1,655.14 | 1,655.14 | 1,655.14 |
| 8. | Reserves (excluding Revaluation Reserve) as shown in the Audited Balance Sheet of the previous year | - | - | - | 35,082.19 | - | - | - | 34,375.20 |
| 9. | Earnings Per Share (of Rs.10/- each) (for continuing and discontinued operations) | | | | | | | | |
| | (a) Basic | 0.24 | (12.54) | (8.74) | (30.31) | 0.35 | (12.02) | (8.49) | (29.67) |
| | (b) Diluted | 0.24 | (12.54) | (8.74) | (30.31) | 0.35 | (12.02) | (8.49) | (29.67) |

**NOTES :**

1. The above results were reviewed by the Audit Committee and thereafter approved and taken on record by the Board of Directors at their meeting held on July 26, 2024.
2. The statement has been prepared in accordance with the Companies (Indian Accounting Standards) Rules, 2015 (Ind AS) prescribed under section 133 of the Companies Act, 2013 and other recognised accounting practices and policies to the extent applicable.
3. The above is an extract of the detailed format of the quarterly financial results ended June 30, 2024 filed with the Stock Exchange under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Unaudited Financial Results for the Quarter ended June 30, 2024 are available on the website of the BSE Limited i.e. **www.bseindia.com**, on the Stock Exchange where the Company's shares are listed and on the website of the Company i.e., **www.tulsyannec.in**
4. The previous year figures have been regrouped/re-classified wherever necessary.

for **Tulsyan NEC Limited**
**Sd/-**
**Sanjay Tulsyan**
Managing Director
DIN : 00632802

Place : Chennai
Date : 26th July, 2024



## சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட்

सी पी सी एल — CPCL

(இந்திய அரசு நிறுவனம் மற்றும் இந்தியன் ஆயில் குழு நிறுவனம்)

பதிவு அலுவலகம்: 536, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை–600 018.

Website : www.cpcl.co.in ; Email id: sld@cpcl.co.in Tel: 044-24349833 / 24346807 CIN: L40101TN1965GOI005389

**ஜூன் 30, 2024–ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட தனியான மற்றும் தணிக்கை செய்யப்பட்ட ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகள் அறிக்கை சுருக்கம்**

(ரூ. கோடியில்)

| வ. எண் | விவரங்கள் | தனியானது: முடிந்த 3 மாதங்கள் 30.06.2024 தணிக்கை செய்தது | தனியானது: முடிந்த 3 மாதங்கள் 31.03.2024 தணிக்கை செய்தது | தனியானது: முடிந்த 3 மாதங்கள் 30.06.2023 தணிக்கை செய்யாதது | தனியானது: முடிந்த ஆண்டு 31.03.2024 தணிக்கை செய்தது | ஒருங்கிணைந்தது: முடிந்த 3 மாதங்கள் 30.06.2024 தணிக்கை செய்தது | ஒருங்கிணைந்தது: முடிந்த 3 மாதங்கள் 31.03.2024 தணிக்கை செய்தது | ஒருங்கிணைந்தது: முடிந்த 3 மாதங்கள் 30.06.2023 தணிக்கை செய்யாதது | ஒருங்கிணைந்தது: முடிந்த ஆண்டு 31.03.2024 தணிக்கை செய்தது |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் | 20365.28 | 20826.44 | 17987.82 | 79285.50 | 20365.28 | 20826.44 | 17988.02 | 79283.01 |
| 2 | நடப்பு காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்) | 469.64 | 843.52 | 747.44 | 3659.87 | 484.07 | 859.03 | 755.62 | 3693.69 |
| 3 | நடப்பு காலத்திற்கான வரிக்கு முன் நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 469.64 | 843.52 | 747.44 | 3659.87 | 484.07 | 859.03 | 755.62 | 3693.69 |
| 4 | நடப்பு காலத்திற்கான வரிக்கு பின் நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 342.60 | 612.38 | 548.32 | 2711.25 | 357.03 | 627.89 | 556.50 | 2745.07 |
| 5 | நடப்பு காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (நடப்பு காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) ஆகியவற்றை உள்ளடக்கியது) | **340.93** | **615.19** | **548.32** | **2714.06** | **355.36** | **630.72** | **556.50** | **2747.90** |
| 6 | செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (பங்கு ஒன்றின் முகமதிப்பு ரூ.10/–) | 148.91 | 148.91 | 148.91 | 148.91 | 148.91 | 148.91 | 148.91 | 148.91 |
| 7 | ரிசர்வுகள் (மறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலாக) | 8534.94 | 8194.01 | 4750.07 | 8194.01 | 8777.33 | 8421.97 | 4945.42 | 8421.97 |
| 8 | பத்திரங்களின் பிரீமியம் கணக்கு | 250.04 | 250.04 | 250.04 | 250.04 | 250.04 | 250.04 | 250.04 | 250.04 |
| 9 | நிகர மதிப்பு | 8933.89 | 8592.96 | 6829.29 | 8592.96 | 9176.28 | 8820.92 | 7031.60 | 8820.92 |
| 10 | செலுத்தப்பட்ட கடன் மூலதனம்/ மீட்கக்கூடிய முன்னுரிமை பங்குகள் நீங்கலாக நிலுவையில் உள்ள கடன் (பத்திரங்கள்/கடன் பத்திரங்கள்) | 810 | 1585 | 1585 | 1585.00 | 810 | 1585 | 1585 | 1585.00 |
| 11 | நிலுவையில் உள்ள மீட்கக்கூடிய முன்னுரிமை பங்குகள் (50,00,00,000 (2023: 50,00,00,000) மாற்ற முடியாத ஒட்டுமொத்த மீட்கக்கூடிய முன்னுரிமை பங்குகள் ஒவ்வொன்றும் ரூ.10/– (பட்டியலிடப்படாதது) | 500.00 | 500.00 | 500.00 | 500.00 | 500.00 | 500.00 | 500.00 | 500.00 |
| 12 | கடன் சம விகிதம் | 0.49 | 0.32 | 0.86 | 0.32 | 0.48 | 0.31 | 0.84 | 0.31 |
| 13 | ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒவ்வொன்றும் ரூ.10/–) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்) | | | | | | | | |
| | (i) அடிப்படை (ரூ./பங்கு) | 23.01 | 41.12 | 36.82 | 182.07 | 23.98 | 42.17 | 37.37 | 184.34 |
| | (ii) பலமிழந்தது (ரூ./பங்கு) | 23.01 | 41.12 | 36.82 | 182.07 | 23.98 | 42.17 | 37.37 | 184.34 |
| 14 | மூலதன மீட்பு இருப்பு | 1000.00 | 1000.00 | 1000.00 | 1000.00 | 1,000.00 | 1,000.00 | 1,000.00 | 1000.00 |
| 15 | கடன் பத்திர மீட்பு இருப்பு | | | | | | | | |
| 16 | கடன் சேவை பாதுகாப்பு விகிதம் | 0.65 | 8.95 | 7.98 | 10.79 | 0.66 | 9.12 | 8.07 | 10.89 |
| 17 | வட்டி சேவை பாதுகாப்பு விகிதம் | 14.00 | 20.52 | 16.63 | 20.10 | 14.30 | 20.82 | 16.78 | 20.26 |

குறிப்பு:

1. SEBI (விண்ணப்ப பட்டியல் மற்றும் வெளியீடு தேவைகள்) கட்டுப்பாடுகள் 2015, விதி 33 மற்றும் 52–ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. மேற்சொன்ன காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ்சுகளின் இணையதளங்கள் www.bseindia.com மற்றும் www.nseindia.com–ல் உள்ளது. கம்பெனியின் இணையதளம் www.cpcl.co.inலும் அவை உள்ளது.

2. பட்டியலிடுதல் விதிமுறைகளின் 52(4) விதியில் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற வரிசை உருப்படிகளுக்கு பொருத்தமான வெளிப்பாடுகள், பங்குச் சந்தைகளுக்கு (BSE மற்றும் NSE) வழங்கப்பட்டுள்ளன, மேலும் www.bseindia.com மற்றும் www.nseindia.com–ல் அவற்றை அணுகலாம்.

குழுவின் ஆணைப்படி
**ரோஹித் குமார் அக்ரவாலா**
இயக்குனர் (நிதி)
DIN: 10048961

இடம்: சென்னை
தேதி: ஜூலை 25, 2024